## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 62/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 3 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணய்யா நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : கொல்லகுப்பம் |
| தொழில் | : வழக்கறிஞர் | வட்டம் | : திருத்தணி |

**29.08.2024**

<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது கொல்லகுப்பத்தில் வசிக்கிறேனா என்றால் நான் கடந்த 45 வருடங்களாக வேலை நிமித்தம் சென்னையில் வசித்து வருகிறேன். ஆனால் என் சொந்த ஊர் கொல்லகுப்பம் ஆகும். கொல்லக்குப்பத்தில் எனக்கு வீடு உள்ளதா என்றால் உள்ளது. எந்த புல எண்ணில் உள்ளது என்றால் 151/22 ஆகும். தாவா சொத்தில் இருந்து மேற்படி புல எண்.151/22 எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் இரண்டு நிலமும் அருகருகில் ஒன்றாகதான் உள்ளது.

2. தாவா நிலத்திற்கு என் வீடு எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் என் வீட்டின் முன்பு பாதை உள்ளது. பாதையை ஒட்டி தாவா நிலம் உள்ளது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 1வது இலக்கம் புல எண் 150/22 ஆகும். 2வது இலக்கத்தின் புல எண்.150/24 ஆகும். 3வது இலக்கம் புல எண்.150/27 ஆகும். தாவா 3 சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தாவா 3 இலக்கங்களும் எங்கள் விவசாய நிலத்துடன் இணைந்த சொத்தாகும்.

3. விவசாய நிலம் என்பது நஞ்சை, புஞ்சை என்று சொல்கிறேனா என்றால் அது விவசாய நிலம்தான். தாவா நிலங்கள் கிராம நத்தம் என்றுதான் வருவாய் ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். தாவா 18 செண்ட் கிராம நத்தம் நிலம் என்றால் சரிதான். கீதா பாபு யார் என்றால் என் மனைவி ஆவார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை யார் எழுதி கொடுத்துள்ளார் என்றால் என் மனைவிக்கு அவரது பெற்றோர் எழுதி கொடுத்துள்ளனர். செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன உள்ளது என்பது தெரியும் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்திலும் தாவா நிலங்கள் கிராம நத்தம் என்றுதான் உள்ளது என்றால் சரிதான்.

4. தாவா சொத்து இல்லாமல் கொல்லகுப்பம் கிராமத்தில் 150/22, 150/24, 150/27 ஆகிய நிலங்கள் இருப்பது போல புல எண்.150/25, 150/26 ஆகிய நிலங்களும் உள்ளது என்றால் தாவா சொத்துக்களான 150/22, 150/24, 150/27 கிராமத்தின் கிழக்கு பக்கம் எங்கள் விவசாய நிலத்துடன் சேர்ந்து உள்ளது. புல எண்.150/25, 150/26 ஆகியவை கிராமத்தின் மேற்கு பக்கம் சாலையாக உள்ளது. புல எண். 150/22, 150/24, 150/27 தவிர புல எண்.150/25, 150/26 ஆகியவையும் கிராம நத்தமாக உள்ளது என்றால் என் முன்னோர் 100 ஆண்டுகளுக்கு முன்பு சாலைக்காக மேற்படி புல எண். 150/25, 150/26 ஐ கொடுத்துவிட்டார்கள்.

5. புல எண்.151/22 காலிமனையாக உள்ளது என்றால் காலிமனையாக இல்லை. கிணறு, கிணற்று மேடு, மின் இணைப்பு எண்.5, மின்சார அறை, கூரைவீடு, மாட்டு தொழுவம் ஆகியவை மேற்படி புல எண்ணில் இருந்தது. மேற்படி விவரங்கள் அரசாங்க ஆவணங்களிலும் உள்ளது. என் முன்னோர்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பு சாலைக்காக மேற்படி புல எண். 150/25, 150/26 ஐ கொடுத்துவிட்டதாக நான் சொல்வதில் மேற்படி புல எண். 150/25, 150/26 ஐயும் பி.வா.சா.ஆ 2

ஆவணத்தில் என் மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஏன் காட்டப்பட்டுள்ளது என்றால் சாலைக்காக கொடுக்கப்பட்டுவிட்டது. தவறுதலாக காட்டியிருக்கலாம். எனக்கு தெரியவில்லை.

6. என் மனைவிக்கு எழுதி கொடுக்கப்பட்ட பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் புல எண்.150/25, 150/26 ஐ காலிமனையாக காட்டி தெளிவாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் நான் தற்போது நீதிமன்றத்தில் 100 ஆண்டுகளுக்கு முன்பு சாலைக்காக என் முன்னோர்களால் விடப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அந்த 2 மனைகளும் அரசுக்கு சாலைக்காக கொடுக்கப்பட்டுவிட்டது. அரசு ஆவணங்களிலும் சாலையாக பதியப்பட்டது. தாவா 1 வது இலக்கமான புல எண்.151/22 ன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது தாவா சொத்தே இல்லை. புல எண்.150/22, 150/24, 150/27 தான் தாவா சொத்தாகும்.

7. கிராம நத்தம் புல எண்.150/22 ல் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சுமார் 3 செண்ட் ஆகும். கிராம நத்தம் புல எண்.150/24 ல் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சுமார் 9 முதல் 10 செண்ட் ஆகும். கிராம நத்தம் புல எண்.150/27 ல் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சுமார் 5 செண்ட் இருக்கும். கிராம நத்தம் புல எண்.150/25, 150/26 ல் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது தாவா சொத்தே இல்லை. கிராம நத்தம் புல எண்.150/25, 150/26 ல் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது சாலைக்காக கொடுக்கப்பட்டுவிட்டது. எனவே தெரியாது.

8. தாவா 3 இலக்க சொத்துக்களும் சேர்த்து 18 செண்ட் இன்றும் காலிமனையாக உள்ளது என்றாலும் அது கிராம மக்கள் அனைவரும் நான் உட்பட பொதுவில் உள்ள சொத்து என்றாலும் அது பொது சொத்து அல்ல. எங்களுக்கு பாத்தியமான தனி சொத்து. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் பயிர் செய்யும் நிலம் போக மீதமிருக்கும் சொத்தில் பூமியில் 5 அடி

உயரத்தில் சுவர் எழுப்பி தூண்கள் எழுப்பி தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பே விவசாயத்திற்காக ஒரு அமைப்பை அமைத்துள்ளோம். அது இன்றுவரை அப்படியேதான் உள்ளது. இதை வாதிகளும் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

9. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் நரசிம்மலு நாயுடு அவரது அண்ணன் சீனிவாசலு நாயுடுவின் மகன் ஜெயராமலு நாயுடு அவரது மனைவி புஷ்பம்மாள் ஆகிய இருவருக்கும் 1969 ம் ஆண்டு தாவா சொத்தையும் பிற சொத்துக்களையும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் எழுதி கொடுத்திருக்கிறார்கள். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் உள்ள ஜெயராமலு நாயுடு, புஷ்பம்மாள் என்பவர் நரசிம்மலு நாயுடுவின் சொந்த மகன், மகள் இல்லை என்றால் அண்ணன் மகன், அண்ணன் மகனின் மனைவி ஆவார்.

10. நான் சொல்லும் ஜெயராமலு நாயுடு, புஷ்பம்மாள் என்பவர் நரசிம்மலு நாயுடுவின் அண்ணன் மகன், அண்ணன் மருமகள் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி ஆவணத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. எந்த பக்கத்தில் எத்தனையாவது இலக்கமாக தாவா சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு பக்கம் 3 ல் **"சர்வே எண்.17/3 ல் உள்ள கிணற்றில் 1/2 பாகம் மின்சார செட்டில் 1/2 பாகம், இதற்கு நீர்பாசனத்திற்காக"** என்று குறிப்பிடப்பட்டுள்ளதுதான் தாவா சொத்தாகும். புல எண்.17/3 என்பது மேற்படி சொத்தின் பழைய புல எண் ஆகும்.

11. தாவா சொத்திற்கும் பி.வா.சா.ஆ 4 உயிலுக்கும் எந்த

சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புல எண்.150/22, 150/24, 150/27 பி.வா.சா.ஆ 4 உயிலில் இல்லை என்றாலும்நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புல எண்.17/3 தான் புல எண். 150/22, 150/24, 150/27 ஆக மாறியுள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பி.வா.சா.ஆ 3 SLR தாக்கல் செய்துள்ளேன்.

12. புல எண். 150/22, 150/24, 150/27 ன் பழைய புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.17/3 ஆகும். புல எண்.17/3 ல் மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்கள் பி.வா.சா.ஆ 3 SLR ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தில் உள்ளது மொத்தமுமே புல எண்.17/3 க்கு உரியதுதான். புல எண்.150/25, 150/26 ன் பழைய புல எண் 17/3 ஆ என்றால் இல்லை. அதன் பழைய புல எண்.17/2 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ல் புல எண்.17/3 கொல்லகுப்பம் கிராம நத்தம் கிணறு என உள்ளது என்றால் கிணறு என்பதை வாதியே ஒப்புக்கொண்டுள்ளார். கிணறுக்கான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)